


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




மலர்:03 இதழ்:231 4 பக்கங்கள் 20:03:2026 வெள்ளிக்கிழமை விலை ரூ,6 வருடசந்தா ரூ,1825



**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு.**

**விளக்கம்:**
புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல். அக்கொடையா னல்லது உயிர்க்கு இலாபம் வேறொன்றில்லை. இது புகழுண்டாமாறு கூறிற்று.

## உகாதி, குடி பட்வா புத்தாண்டு: பிரதமர் மோடி வாழ்த்து



**புதுடெல்லி: மார்ச்,20** ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகாவில் தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் நேற்று உகாதி புத்தாண்டை கொண்டாடினர்.இதேபோல மகாராஷ்டிரா (குடி பட்வா), சிந்து, காஷ்மீர் இந்துக்கள், மணிப்பூரின் மைதேயி மக்கள் நேற்று புத்தாண்டு கொண்டாடினர். இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அவரவர் தாய் மொழிகளில் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.உகாதி புத்தாண்டு குறித்து அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "புத்தாண்டில் மகிழ்ச்சி, வெற்றி மற்றும் ஆரோக்கியமான உடல் நலத்துடன் மக்கள் வாழ கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## கேரளாவின் தர்மடம் தொகுதியில் முதல்வர் பினராயி விஜயன் மனுத் தாக்கல்



**கண்ணூர்: மார்ச்,20** கேரளாவில் சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் 9ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. இதையடுத்து மாநில முதல்வர் பினராயி விஜயன் (80) கண்ணூர் மாவட்டத்தில் உள்ள தர்மடம் தொகுதியில் நேற்று வாகன பேரணி மூலம் பிரச்சாரத்தை தொடங்கினார்.தலச்சேரியில் உள்ள துணை பதிவாளர் அலுவலகத்தில் அவர் நேற்று காலை 11 மணியளவில் மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அதில் அவர், தனக்கு ரூ.45 லட்சம் மதிப்பில் அசையும் சொத்துகளும், ரூ.56 லட்சம் மதிப்பில் அசையா சொத்துகளும் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சட்டப்பேரவை தேர்தலில் 7-வது முறையாக போட்டியிடும் முதல்வர் பினராயி விஜயன், தர்மடம் தொகுதியில் தொடர்ந்து 3வது முறையாக போட்டியிடுகிறார்.இங்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் அப்துல் ரசீத்தும், பாஜக சார்பில் ரஞ்சித் என்பவரும் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளனர். பாஜக.வின் 2-வது பட்டியல் கேரளா சட்டப்பேரவை தேர்தலில் 47 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பாஜக ஏற்கெனவே வெளியிட்டிருந்தது.இந்நிலையில் 39 வேட்பாளர்கள் அடங்கிய 2-வது பட்டியலை பாஜக நேற்று வெளியிட்டது. பாஜக முன்னாள் மாநில தலைவரும், மிசோரம் மாநில முன்னாள் ஆளுநருமான கும்மனம் ராஜசேகரன் அரண்முலா தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு உள்ளார்.

## தனியார் இடங்களில் தொழுகைக்கு தடை விதிக்க முடியாது: அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பு



**புதுடெல்லி: மார்ச்,20** தனியாருக்கு சொந்தமான இடங்களில் தொழுகை நடத்துவதற்கு உ.பி.யில் சம்பல் உள்ளிட்ட சில மாவட்டங்கள் தடை விதித்தன. இந்த சூழலில் சம்பல் மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவை எதிர்த்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் முனாசீர் கான் என்பவர் வழக்கு தொடர்ந்தார்.இந்த வழக்கில் நீதிபதிகள் அத்துல் தர், சித்தார்த் நந்தன் அமர்வு நேற்று வழங்கிய தீர்ப்பில் கூறியிருப்பதாவது: இந்திய அரசியலமைப்பின் 25-வது பிரிவு, ஒவ்வொரு குடிமகனுக்கும் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும், பரப்பவும் முழு உரிமை அளிக்கிறது. எனவே, எந்தவொரு நபரும் தனது சொந்த வளாகத்தில் நடத்தும் பிரார்த்தனைகளையோ அல்லது மதச் சடங்குகளையோ தடை செய்ய முடியாது.தனியார் இடங்களில் நடைபெறும் பிரார்த்தனைகளுக்கு தனி நபர் அல்லது குழுக்கள் ஆட்சேபம் தெரிவித்தால் அதை அரசு கவனத்தில் கொண்டு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. முனாசீர் கான் அனுமதி கேட்ட நிலம் 1995-ல் மசூதி கட்ட அவரது தாத்தாவால் ஒதுக்கப்பட்டது. எனினும் அந்த இடத்தில் உள்ள கட்டமைப்பை முழு மசூதியாக நீதிமன்றம் ஏற்கவில்லை. ஆனால், அங்கு தொழுகை நடத்துவதை தடுக்கக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# ஸ்டாலினுடன் திருமாவளவன் சந்திப்பு



**மார்ச்,20** திமுக - விசிக தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடித்துவரும் நிலையில் முதல்வர் ஸ்டாலினை, திருமாவளவன் நேற்று சந்தித்துப் பேசினார்.
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. ஆளும் கட்சியான திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், தேமுதிக, மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட 26 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.
திமுக சார்பில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையானது கடந்த பிப். 22-ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரஸுக்கு 28, இந்திய கம்யூ. 5, மதிமுக 4, முஸ்லிம் லீக், மமக தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதர கட்சிகளுடன் திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.
திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட், விசிக உள்ளிட்ட சில கட்சிகள் உடனான தொகுதிப் பங்கீடு மட்டுமே இழுபறியில் உள்ளன. மார்க்சிஸ்ட் 7, விசிக 8 என கடந்த முறையைவிட கூடுதல் தொகுதிகளை கேட்டு வருகின்றன. ஆனால், திமுக தரப்பில் கூட்டணிக்கு புதிய கட்சிகள் வந்துள்ளதால் தொகுதிகளை குறைத்துக் கொள்ள வலியுறுத்தப்படுகிறது. இதனால் உடன்பாடு ஏற்படாமல் இருதரப்பிலும் இழுபறி நீடித்துவருகிறது.
இந்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை, விசிக தலைவர் திருமாவளவன் அவரது இல்லத்தில் நேற்றும் சந்தித்துப் பேசினார். அப்போது, 6 தனித் தொகுதிகள், 2 பொதுத்தொகுதிகள் என 8 தொகுதிகள் வரை தங்களுக்கு வேண்டுமென திருமாவளவன் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு 7 இடங்கள் வரை ஒதுக்குவதற்கு முதல்வர் ஸ்டாலின் ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.
இதனைத் தொடர்ந்து தொகுதி பங்கீடுஒப்பந்தம் இன்று (மார்ச் 20)கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மார்க்சிஸ்ட் கட்சிக்கும் 6 தொகுதிகள் ஒதுக்கி உடன்பாட்டை முடிப்பதற்கு திமுக திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.
விருப்ப மனு: இதற்கிடையே, விசிக சார்பில் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் 21-ம் தேதி முதல் விருப்ப மனு அளிக்கலாம் என்றும், கட்சியின் தலைமையகத்தில் மனுக்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விருப்ப மனு கட்டணமாக ரூ.5000 செலுத்த வேண்டும். மேலும், திருமாவளவன் தலைமையில் கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## விளாத்திக்குளம் மாணவி கொலையில் தொடர்புடையவர் கண்டுபிடிக்கப்பட்டது எப்படி? தென் மண்டல ஐஜி விவரிப்பு,





**மதுரை:மார்ச்,20**
மதுரை விளாத்திகுளம் பள்ளி மாணவி கொலை வழக்கில் தொடர்புடையவர் எப்படி கண்டுபிடிக்கப்பட்டார் என்பது குறித்து தென் மண்டல ஐஜி விஜயேந்திர பிதாரி விளக்கம் அளித்துள்ளார்.இது தொடர்பாக அவர் இன்று கூறியது: "தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் காவல் நிலைய எல்லைக்குள் நடந்த 12-ம் வகுப்பு மாணவி கொலை வழக்கில் தொடக்கத்தில் எந்தத் தடயமும் இல்லாத நிலையில், திட்டமிட்ட, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, அந்தக் கொலையில் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.மாணவி காணாமல் போனது தொடர்பாக மார்ச் 11-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதே நாளில் மாணவியின் உடல் வேநதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் வழக்கு கொலை மற்றும் போக்சோ சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டது. சம்பவ இடம் உடனடியாக பாதுகாக்கப்பட்டு விரல் ரேகை நிபுணர்கள், மோப்ப நாய் மற்றும் தடவியல் குழுவினரின் சோதனை நடத்தப்பட்டது. மூத்த அதிகாரிகளின் மேற்பார்வையில் விசாரணை நடைபெற்றது.கூடுதல் டிஜிபி தலைமையில் உயர் காவல் துறை அதிகாரிகள் 3 நாள் முகாமிட்டனர். 4 டிஎஸ்பிக்கள் தலைமையில் 6 ஆய்வாளர்கள், 12 துணை ஆய்வாளர்கள், 150 போலீஸார் அடங்கிய 10 தனிப்படை அமைக்கப்பட்டது. உள்ளூர் சந்தேக நபர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், வழக்குகளில் தொடர்புடையவர்கள், சமீபத்தில் சிறையிலிருந்து வெளியே வந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் பின்னணி மற்றும் தொடர்புகள், தொழில்நுட்ப ஆதாரங்கள் என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தப்பட்டது.சம்பவ இடத்தில் சிசிடிவி கேமரா இல்லாத போதிலும் சுற்றுவட்டாரப் பகுதியில் இருந்து 98 சிசிடிவி கேமரா காட்சிகள் சேகரிக்கப்பட்டது. 2,524 செல்போன் எண்களின் 2,500-க்கும் மேற்பட்ட அழைப்புகள் பரிசோதனை செய்யப்பட்டது. இந்தச் சோதனை அடிப்படையில் 50 பேர் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர். இதில் 5 பேரின் டிஎன்ஏ மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. இருப்பினும் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. இந்நிலையில், சம்பவ இடம் அருகே இரு சக்கர வாகனம் நிறுத்தப்பட்டு, பின்னால் காணாமல் போனது கண்டுபிடிக்கப்பட்டது. அருகிலுள்ள காற்றாலை பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவை ஆய்வு செய்தபோது அந்த வாகனத்தின் பதிவு எண் மாற்றப்பட்டிருந்ததும், அது பார்த்தீபனூரில் திருடப்பட்டதும் தெரியவந்தது. இதை வைத்து ஆய்வு செய்த போது சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலையானவர்களின் பதிவுகளை ஆய்வு செய்தபோது தர்மமுனீஸ்வரன் என்ற மாவீரன் அடையாளம் காணப்பட்டார். இவர் ஏற்கெனவே கடுமையான குற்றத்தில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர். இந்த தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்துள்ளார். உயர் நீதிமன்றம் அவருக்கு விசாரணை நீதிமன்றம் அளித்த தண்டனையை நிறுத்தி வைத்து, தினமும் தூத்துக்குடி நீதிமன்றத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் பேரில் கடந்த டிசம்பர் மாதம் ஜாமீன் வழங்கியது.அவரிடம் விசாரணை நடத்தியபோது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனால் அவர் கைது செய்யப்பட்டார். தகவல் சேகரிப்பு, நுணுக்கமான விசாரணை, ஒருங்கிணைப்பு, அறிவியல், தொழில்நுட்பப் பகுப்பாய்வால் தடயம் இல்லாத வழக்குகளையும் தீர்க்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று தென் மண்டல ஐஜி விஜயேந்திர பிதாரி தெரிவித்தார்.

## திண்டுக்கல்லில் நள்ளிரவில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ1,96,420 பணம் பறிமுதல்




**திண்டுக்கல்: மார்ச்,20**
மாலபட்டிரோடு, சிட்கோ அருகே நள்ளிரவில் கண்ணன் தலைமையிலான தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அப்போது திண்டுக்கல்லில் இருந்து மாலபட்டி நோக்கி சென்று கொண்டிருந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.அந்தக் காரில் அருண்ராமசாமி என்பவர் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1,96,420 பணத்தை பறிமுதல் செய்து திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சுல்தான் சிக்கந்தர் அவர்களிடம் தேர்தல் பறக்கும் படையினர் ஒப்படைத்தனர். இதனைத் தொடர்ந்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சுல்தான் சிக்கந்தர் பணத்தை கருவூலத்தில் ஒப்படைத்தார்மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (கணக்கு) அவர்களிடம் உரிய ஆவணங்களை காண்பித்து பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

## சென்னை | சவ ஊர்வலத்தில் நடனமாடுவதில் மோதல்: உணவு டெலிவரி நிறுவன ஊழியரை தாக்கிய 2 பேர் கைது,,





**சென்னை: மார்ச்,20**
ராயப்பேட்டை, ரோட்டரி நகர் 15-வது தெருவைச் சேர்ந்தவர் ஜீவா (31). தனியார் உணவு டெலிவரி நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார்.
கடந்த 15-ம் தேதி, இவரது வீட்டருகே வசித்து வந்த பெண் உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். மாலையில் அவரது இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அதில், பங்கேற்று ஜீவா நடனமாடினார்.
மேலும், சிலரும் ஆடினர். அப்போது, இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து உறவினர்கள் இரு தரப்பையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.
சிறிது நேரத்துக்கு பிறகு ஜீவா அதே பகுதியில் உள்ள ஆர்.கே.சாலை, பறக்கும் ரயில் நிலைய பாலம் அருகேயுள்ள டீக்கடையில் அமர்ந்திருந்தார்.
அப்போது, அங்கு பைக்கில் வந்த 2 பேர், சவ ஊர்வல தகராறை சுட்டிக்காட்டி கம்பியால் தாக்கி விட்டு தப்பினர்.
இதில், காயம் அடைந்த ஜீவா சிகிச்சைக்கு பின்னர், ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.
இதில், தாக்குதல் நடத்தி விட்டு தப்பியது திருவல்லிக்கேணி, ரோட்டரி நகரைச் சேர்ந்த மணிகண்டன் (25), அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்த் (30) என்பது தெரிந்தது.

### காரைக்குடி மீனாட்சிபுரத்தில் உள்ள

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மாசி, பங்குனி வசந்த உற்வச திருவிழா!

## லட்சக்கணக்கானோர் பால்குடம் எடுத்தனர்!!



**காரைக்குடி, மார்ச்.20–**

காரைக்குடி மீனாட்சி புரத்தில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு உட்பட்ட ஸ்ரீ முத்துமாரி யம்மன் திருக் கோவில் மாசி பங்குனி திருவிழா கடந்த 14–ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. லட்சக்கணக்கானோர் காப்பு கட்டி விரதம் மேற்கொண்டனர். ஒவ்வொரு நாளும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடந்தது. பக்தர்கள் பால்குடம், அக்கினி சட்டி எடுத்து வருதல், அழகு குத்துதல் என வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

நேற்று முன்தினம் முளைப்பாரி ஊர்வலம், அக்னி சட்டி நேர்த்திக்கடன் நிகழ்ச்சி நடந்தது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பால்குட ஊர்வலம் நேற்று நடந்தது. அதிகாலை 12 மணிக்கு மேல் தொடங்கிய பால்குட ஊர்வலம் பகல் முழுவதும் தொடர்ந்தது. காரைக்குடி மட்டுமன்றி சுற்றியுள்ள சூரக்குடி, குன்றக்குடி மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியை சேர்ந்தவர்கள் பால்குட நேர்த்திக்கடனை செலுத்தினர்.

சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசமின்றி பால் முகங்களை வெண்மையாக்கும் வகையில் முத்து மாரியம்மனுக்கு முத்தாலம்மன் கோயிலிருந்து, கல்லுக்கட்டி, முத்தூரணி வழியாக இரண்டு கி.மீ.,க்கு மேல் நடந்து பால்குடம் எடுத்து வந்தனர். லட்சக்கணக்கானோர் எடுத்து வந்த பால்குடத்தை நகரின் இரண்டு புறமும் இருந்து ஊர் மக்கள் கண்டுகளித்தனர்.

அதை தொடர்ந்து காலை திருக்கோயில் காவடி மற்றும் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடந்தது. ஊர் முழுவதும் பால்குட ஊர்வலம் வந்து செல்லும் ரோட்டு ஓரங்களில் தன்னார்வலர்களின் 100க்கும் மேற்பட்ட அன்னதானம் நடந்தது. நேற்று மாலை திருக்கோயில் கரகம் மற்றும் முளைப்பாரியை பருப்பூரணி கரையில் கரைக்கும் நிகழ்வு வாண வேடிக்கையுடன் நடக்க உள்ளது. நாளை 10–ம் நாளையொட்டி அன்னையின் திருவீதி உலா, சந்தன காப்பு அலங்காரம் நடக்கிறது.

ஏற்பாடுகளை சிவகங்கை இணை ஆணையர் செல்லத்துரை தலைமையில் உதவி ஆணையர் ஞானசேகரன், செயல் அலுவலர் மகேந்திரபூபதி, கணக்கர் அழகுபாண்டி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர். காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் சங்கரன், மேயர் (பொ) குணசேகரன் தலைமையில் மாநகராட்சி பணியாளர்கள் துப்புரவு பணி மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நிலக்கோட்டையில்

# நேருக்கு நேர் மோட்டார் சைக்கிள் மோதிய வாலிபர்!

## போலீசார் விரட்டியதால் பரபரப்பு!!



**நிலக்கோட்டை, மார்ச்.20–**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அணைப்பட்டி சாலையில் உள்ள தினசரி சந்தை நுழைவாயில் பகுதி அருகே இரண்டு வாலிபர்கள் மோட்டார் சைக்கிளில் அணைப்பட்டி பகுதியில் இருந்து வந்த ஒரு வாலிபரம் நிலக்கோட்டையில் இருந்து அணைப்பட்டி நோக்கி சென்ற வாலிபரும் மோட்டார் சைக்கிளில் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர். அதில் ஒரு பைக் ஒரு லாரியின் சக்கரத்தின் அடியில் சென்றது.

இதை அறிந்த லாரி டிரைவர் சுதாரித்து லாரி நிறுத்திவிட்டார். இதனால் அங்கிருந்தவர்கள் உடனடியாக மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை முதலுதவி அளிப்பதற்கு பொதுமக்கள் சென்றனர். அதில் அணைப்பட்டி பகுதியிலிருந்து வந்த வாலிபர் திடீரென்று போலீசார் வருவதைப் பார்த்து பதறி அடித்து ஓடினார். உடனடியாக போலீசார் அவரை துரத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதுபோன்று விபத்துக்கள் தினந்தோறும் நடப்பது சர்வ சாதாரணமாக நிகழ்ச்சியாக இருந்தாலும் வாலிபர் பயத்தில் ஓடியது மிகுந்த பரபரப்பு ஏற்படுத்தியது அந்த பக்கத்தில் இருந்த பொதுமக்கள் அனைவரும் வியந்து பார்த்தனர். எனவே வருகிற காலங்களில் இளைஞர்களுக்கு விபத்து நடந்தால் அதனை உடனடியாக போலீசாரிடம் முறையிடுவதை விட்டுவிட்டு போலீசை கண்டு ஓடுவது என்பது மிகுந்த அளவில் இன்றைய நவநாகரீக காலத்தில் கூட சட்ட விழிப்புணர்வு தெரியாமல் இப்படி இளைஞர் ஓடுகிறாரே சமூக ஆர்வலர்கள் அந்த இடத்தில் பேசிக்கொண்டனர்.




மதுரை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான பிரவீன் குமார் கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் "சபாநாயகி" என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக பொதுமக்களிடையே தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் என் வாக்கு என் உரிமை என கையெழுத்திட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் , ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வானதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சாத்தூரில் வாகன சோதனையில்

# நகை வியாபாரியிடம் ரூ.90.77 லட்சம் 70 பவுன் தங்க நகைகள் பறிமுதல்!

## தேர்தல் பறக்கும்படையினர் நடவடிக்கை!!



**சாத்தூர், மார்ச்.20–**

தமிழகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 2026 சட்டமன்ற பொது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் தேர்தல் ஆணையம் உத்தரவின் பேரில் பறக்கும் படையினர் பல்வேறு இடங்களில் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சாத்தூர் வெங்கடாசலபுரம் சோதனைச் சாவடி அருகே பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர் அப்போது மதுரையில் இருந்து திருநெல்வேலி நோக்கி வந்த காரினை மறித்து சோதனையிட்ட போது காரில் 90 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 70 பவுன்தங்கநகைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சோதனை அலுவலர் நடத்திய விசாரணையில் இவர் மதுரையைச் சேர்ந்த நகை செய்து வியாபாரம் செய்யும் வியாபாரி என்பதும் இவர் பெயர் முத்துக்குமார் என்பதும் மதுரையில் இருந்து திருநெல்வேலியில் உள்ள நகை கடைக்கு நகைகள் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவந்தது எனினும் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் நகைகளை பறிமுதல் செய்து சாத்தூர் வட்டாட்சியர் வடிவேலு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட நகை மற்றும் பணத்தை தேர்தல் அலுவலர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. இதுகுறித்து சாத்தூர் வட்டாட்சியர் வடிவேலு தெரிவிக்கையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நிலையில் பொதுமக்கள் தாங்கள் கொண்டு வரும் பொருள் மற்றும் பணத்திற்கு உரிய ஆவணங்களுடன் வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

### திண்டுக்கல்லில்

# சரக்கு வாகனத்தில் கணக்கில் வராத ரூ.3 லட்சம் பறிமுதல்!



**திண்டுக்கல், மார்ச்.20–**

திண்டுக்கல், செல்லமந்தாடி, சோதனைசாவடியில் தேர்தல் பறக்கும் படை சிவராமன் தலைமையிலான குழுவினர் வாகனம் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி மேற்கொண்டனர்.

அப்போது அந்த சரக்கு வாகனத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட ரூ.3,01,210 பணத்தை பறிமுதல் செய்து திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சுல்தான் சிக்கந்தர் அவரிடம் பறக்கும் படையினர் ஒப்படைத்தனர்.

விசாரணையில் தனியார் நிறுவனத்தின் வாகனம் என்றும் மேலாளர் கண்ணன் என்பவர் பணத்தை கொண்டு வந்தது தெரிய வந்தது. இதுகுறித்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சிக்கந்தர் சுல்தான் உரிய ஆவணங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் அவரிடம் காண்பித்து பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

### தென்காசி மாவட்டத்தில்

# தேர்தல் தொடர்பாக தெரிவிக்கும் புகார்களுக்கு 100 நிமிடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்!

## அனைத்து கட்சி கூட்டத்தில் கலெக்டர் தகவல்!!



**தென்காசி, மார்ச்.20–**

தென்காசி மாவட்டத்தில் தேர்தல் தொடர்பாக தெரிவிக்கும் புகார்களுக்கு 100 நிமிடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து கட்சி பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டத்தில் ஆட்சியர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் தேர்தல் நடைமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான கமல்கிஷோர் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மாதவன் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் கமல்கிஷோர் கூறியதாவது:–

பிரச்சார கூட்டங்கள், ஊர்வலங்கள் ,தற்காலிக கட்சி அலுவலகங்கள் மற்றும் பிரச்சார வாகனங்களுக்கு அனுமதி பெற கோரும் அரசியல் கட்சிகள் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள், தங்களது மனுக்களை 48 மணி நேரத்திற்கு முன்பு https://suvidha.eci.gov.in/login/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பம் தாக்கல் செய்திட வேண்டும். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கும் வகையில் அல்லது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்வது கூடாது. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பிரச்சாரங்கள், கூட்டங்கள் நடத்த வேண்டும். தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடம், நேரம் குறித்து உரிய முன் அனுமதியும் பெறப்பட வேண்டும்.

பொது மக்கள் தேர்தல் குறித்து புகார் 24 மணி நேரமும் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வரும் 1800 425 8375 கட்டணமில்லா எண் மற்றும் 04633 214632, 04633214633, 04633214636, 04633 214637, 04633214638, 04633214639 ஆகிய தொலைப்பேசி எண்களிலும் புகார் தெரிவிக்கலாம்.

இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து புகார்களை தெரிவிக்க, cVIGIL என்ற பிரத்யேக புதிய செயலியை அறிமுகப்படுத்தி பயன்பாட்டில் உள்ளது. இச்செயலி மூலம் பொதுமக்கள் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து புகைப்படம் மற்றும் வீடியோ மூலம் புகார்களை பதிவு செய்யலாம். தேர்தல் தொடர்பாக தெரிவிக்கும் புகார்களுக்கு 100 நிமிடத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த செயலியை கூகுள் பிளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எனவே, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் அனைத்து நடத்தை விதிகளை பின்பற்றி எந்தவித சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படாத வகையில் நேர்மையான, அமைதியான, முற்றிலும் சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு உரிய ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்

இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் காளிமுத்து (பொது), சுதா (தேர்தல்), தனி வட்டாட்சியர் (தேர்தல்) சண்முகம் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வத்தலக்குண்டு பகுதியில்

# அனுமதி இல்லாமல் சுவரொட்டி நா.த.க. வேட்பாளர் மீது வழக்கு!

## தேர்தல் அதிகாரிகள் நடவடிக்கை!!




**வத்தலக்குண்டு, மார்ச்.20–**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பகுதியில் அனுமதி இல்லாமல் சுவரொட்டி ஒட்டி உள்ளதாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மீது தேர்தல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் தேர்தல் நடத்தை விதிகள் தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் விருப்ப மனுக்கள் பெறப்பட்டு நேர்காணல்கள் நடைபெற்று வரும் நிலையில் நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு நாம் தமிழர் கட்சி மட்டுமே வேட்பாளரை அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் கட்சியின் வேட்பாளர் கையிலை ராஜனை ஆதரித்து பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசு கட்டிடங்கள் மற்றும் பாலங்களில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி சுவரொட்டி ஒட்டப்பட்டு இருப்பதாக வத்தலக்குண்டு காவல் நிலையத்தில் நாம் தமிழர் வேட்பாளர் கையிலை ராஜன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் அனுமதி இல்லாமல் விளம்பர பேனர்கள் வைத்துள்ளவர்கள் மீதும் காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### மானாமதுரை அருகே

# நெல் அறுவடை இயந்திரம் மோதி கர்ப்பிணி பெண் பலி!

## ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து!!



**சிவகங்கை, மார்ச்.20**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே ஓட்டுநரின் அஜாக்கிரதையால் பின்னால் (ரிவர்ஸில்) சென்ற 'ராட்சச' நெல் அறுவடை இயந்திரம் மோதி 21 வயது கர்ப்பிணி பெண் பலி உறவினர்கள் கதறி அழுதது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இம்மாவட்டம் மானாமதுரை அருகே தாகியார் நகரைச் சேர்ந்த தாமரைச் செல்வனின் மனைவி 21 வயதான சோனியா காந்தி $8\frac{1}{2}$ மாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் தனது தம்பி கார்த்திகேயனுடன் இருசக்கர வாகனத்தில் தீத்தான்பேட்டை செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது இவர்கள் சென்ற வாகனத்திற்கு முன்னால் நெல் அறுவடை செய்யும் பெரிய இயந்திர வாகனம் சென்று கொண்டிருந்தது அதனை பின்தொடர்ந்து இவர்கள் டூ வீலரில் சென்ற நிலையில் முன்புறத்தில் தாழ்வாக மின்கம்பி சென்றதால் அந்த இயந்திரத்தின் வாகன ஓட்டுநர் திடீரென வாகனத்தை நிறுத்தியுள்ளார். அந்த நெல் அறுவடை இயந்திரத்தில் அதிக சத்தத்தில் சினிமா பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது பின்னால் டூவீலர் வாகனம் இருப்பதை கவனிக்காமல் அறுவடை எந்திரத்தின் ஓட்டுநர் திடீரென பின்னால் (ரிவர்ஸில்) இயக்கியதால் பின்னால் நின்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் பயங்கரமாக மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் $8\frac{1}{2}$ மாத கர்ப்பிணியான சோனியா காந்தி பலத்த காயமடைந்தார் முதலில் அருகிலிருந்த முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி தாயும் கருவில் இருந்த குழந்தையும் உயிரிழந்தனர்.

மருத்துவமனை வெளியே இறந்த கர்ப்பிணி பெண்ணின் கணவர் மற்றும் உறவினர்கள் கதறி அழுத காட்சி காண்போரை கண் கலங்க வைத்தது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது இது குறித்து மானாமதுரை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள
# ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவ கல்லூரி 21வது பட்டமளிப்பு விழா!
## 92 மாணவிகள் பட்டம் பெற்றனர்!!




கோவை,மார்ச்.20

கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் 21வதுபட்டமளிப்புவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.

பட்டமளிப்பு அணிவகுப்புடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் எஸ். என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் .ஆர். சுந்தர், மணிப்பால் பல் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் கோபாலகிருஷ்ணன். ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் டாக்டர். ஸ்ரீஹரி மற்றும் கல்லூரியின் அனைத்து துறைத் தலைவர்களும் அரங்கினுள்மதிப்புடன்அழைத்து வரப்பட்டனர். அணிவகுப்புக்குப் பின், நிகழ்ச்சி இறை வணக்கப் பாடலுடன் இனிதே ஆரம்பமானது. பின்னர் எஸ்.என். ஆர். அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆர். சுந்தர் அவர்கள் பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். முதல்வர் டாக்டர் ஜா.ஸ்ரீஹரி அவர்கள் வருகை தந்த அனைவரையும் வரவேற்று, பட்டம் பெறும் மாணவர்கள் தங்களின் கல்வி அறிவை வளர்ச்சிக்கான அடிப்படையாக பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆர். சுந்தர்மாணவ மாணவியர்கள் மத்தியில் கூறியதாவது.. பட்டபடிப்பின் முக்கிய நோக்கமே சமுதாயத்திற்கு சேவை செய்வது தான்என்றார்.நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினரான டாக்டர் கோபாலகிருஷ்ணன் பட்டமளிப்பு தின உரையை வழங்கி, மாணவர்களுக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் அளித்தார்.

தொடர்ந்து 80 இளநிலை பட்டதாரிகளும், 12 முதுநிலை பட்டதாரிகளும் தங்களுடைய பட்டங்களைப் பெற்றனர். எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்ற மாணவர்கள் பதக்கங்களோடு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். டாக்டர் சிந்தூரா மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்றதுடன் சிறந்த மாணவிக்கான தங்க பதக்கத்தையும் பெற்றார். மேலும் இரண்டு அறக்கட்டளை நிதியும் அவருக்கு வழங்கப்பட்டது.

பின்னர் துணை முதல்வர் அவர்கள் பட்டம் பெறும் மாணவர்களை மருத்துவ உறுதிமொழி ஏற்க வைத்தார். அதன் பின்னர் பட்டமளிப்பு விழா நிறைவடைந்ததாக நிர்வாக அறங்காவலர் அறிவித்தார். நிகழ்ச்சி தேசிய கீதத்துடன் நிறைவடைந்தது.

## கோவை பேரூர் பகுதியில்
# குருசாமி சித்தரின் 2ம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்ச்சி நடந்தது!
## படத்திற்கு மரியாதை!!



கோவை,மார்ச்.20

கோவை மாவட்டம் பேரூர் பகுதியில், மள்ளரியப் பேராசான் என்றழைக்கபடும் டாக்டர் குருசாமி சித்தரின் இரண்டாம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில்திறலானோர்கலந்துகொண்டுஅவரதுதிருவுருவச் படத்திற்கு மரியாதை செலுத்தினர்,

கோவையில் பிறந்து வளர்ந்த, தமிழ் அறிஞர்களில் ஒருவர் குரு சாமி சித்தர். தேவ நேய பாவாணரை குருவாக கொண்ட இவர், சேர சோழ பாண்டியர்களின் வரலாறு, நீர் மேலாண்மை, சங்க இலக்கியம், மற்றும் மருத பாடல்கள் குறித்து பல்வேறு ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். இவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் வயது மூப்பு காரணமாக உயிழந்தார். மள்ளரியப் பேராசான் என்றழைக்க படும் டாக்டர் குருசாமி சித்தரின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி கோவை பேரூர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு இந்திரன் இதழ் ஆசிரியர் உலகநாதன் தலைமை தாங்கினார். ராஜ தேவேந்திர சுவாமிகள்இந்திராஞ்சலிசெலுத்தினார்.,அன்னபூரணிகுருசாமி சித்தர் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து அனைத்து பொதுமக்களும் இணைந்து டாக்டர் குருசாமி சித்தர் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து குருசாமி சித்தர் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவரது நினைவு களை எடுத்து கூறினர்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் விஜயகுமார், ராஜமணிமாறன், புலியகுளம் முருகராஜ், பனாமா தங்கவேல், பட்டக்காரர் பிரபுகுமார், அவினாசி சேகர், செந்தூர் பாண்டி, தீப முனியப்பன், ஆசிரியர் ஆறுமுகம், பார்த்திபன் பூவை, குனியமுத்தூர் ராமதாஸ், மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை காளம்பாளையம் பகுதியில்
# ஜி.எஸ்.டியூசன் சென்டர் நிறுவனத்தின் புதிய கிளை தொடக்க விழா நிகழ்ச்சி!
## பல்வேறு கலாச்சார நிகழ்வு நடந்தது!!



கோவை,மார்ச்.20

கோவை சிறுவாணி சாலை காளம்பாளையம் பகுதியில், ஜி.எஸ். டியூசன்சென்டர்நிறுவனத்தின் புதிய கிளை, துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது இதனை, ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் மைதிலி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

கோவை மாவட்டம் சிறுவாணி சாலை காளம்பாளையம் பகுதியில், ஜி. எஸ் டியூசன் சென்டரின் புதிய கிளை துவங்கபட்டது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவி பேராசிரியர்முனைவர்மைதிலி, கலந்து கொண்டு இந்த புதிய கிளையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற விழாவில், ஜிஎஸ் டியூசன் சென்டர் நிறுவனத்தின் நிறுவனர் கணேஷ் முருகன், அவர்களது தாய் சாந்தி கங்காதரன், மற்றும் மூத்த ஆசிரியர் சுமன்ஜு ஆகியோர் இணைந்து சிறப்பு விருந்தினரை வரவேற்று மரியாதை செய்தனர். தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் பேசிய தமிழ்த்துறை பேராசிரியர் மைதிலி கூறியதாவது.. மாணவர்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து கடினமாக உழைத்தால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதையும், கல்வியின் முக்கியத்துவம் மற்றும் ஒழுக்கத்தின் அவசியம் பற்றியும் மாணவர்களுக்கு பயனுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கினார். ஜி. எஸ். டியூசன் சென்டர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியர்கள், என பலரும் கலந்து கொண்டு, தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர். ஜி.எஸ். டியூசன் சென்டர்நிறுவனர்கனேஷ் முருகன் தனது உரையில் கூறியதாவது,

ஜிஎஸ் டியூசன் சென்டர் கடந்த, 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது ஐந்தாவது ஆண்டாக வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது, தற்போது 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு கிளைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

2026–2027 கல்வியாண்டிற்கான சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை சிபிஎஸ்இ, மெட்ரிகுலேஷன், மற்றும் ஸ்டேட் போர்ட் பாடத்திட்டங்களுக்கும், சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

காலை, மாலை மற்றும் வார இறுதி சிறப்பு வகுப்புகளும், வாராந்திர மற்றும் மாதாந்திர மதிப்பீடுகளும் இம்மையத்தில் நடைபெறுகின்றது என தெரிவித்தார். தொடர்ச்சியாக மாணவர்களின் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், மாணவ, மாணவிகளின்நடனநிகழ்ச்சிகளும் நடைபெற்று விழா நிறைவு பெற்றது.

## உடுமலைப்பேட்டையில்
# இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இலவச தொழிற்கல்வி மையம்!



உடுமலை,மார்ச்.20

இளைஞர்களுக்கு தொழிற்கல்வி வழங்கி, வேலை வாய்ப்பை உருவாக்க இலவச தொழிற்கல்வி மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது இதன்மூலமாக கிராமபுற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக உள்ளது.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய இளைஞர்களுக்கு தொழிற்கல்வி வழங்கி வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் எஸ்.கே.பி சுனந்தா ராம்மோகன் திறன் எனும், மையம் உடுமலைப்பேட்டையில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையம் 18 முதல் 27 வயதுக்குள் உள்ள, பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த, ஆண்டு குடும்ப வருமானம் ரூ.3 லட்சத்திற்கும் குறைவான இளைஞர்களுக்கு இலவச தொழிற்கல்வி வழங்குகிறது. இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் லாஜிஸ்டிக்ஸ் துறையில் வேலை பெறும் வகையில் பல்வேறு பயிற்சிகளை, 45 முதல் 90 நாட்கள் வரை வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சிகளுக்காக மாணவர்கள் எந்தவித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

இந்த முயற்சி, கரூரில் பிறந்து, அமெரிக்காவில் வசிக்கும் மருத்துவர் டாக்டர்எம். ராம்மோகன், மகாலட்சுமி, முத்துராமலிங்கம் அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தை அமெரிக்காவில் வசிக்கும் டாக்டர் ராஜேந்திர பிரசாத் பரிந்துரையின் பேரில், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்விக் கழகத் தலைவர் டாக்டர். வி.ஜி. மோகன்பிரசாத் மற்றும் அதன் உறுப்பினர்கள், அறங்காவலர்களின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையம் குறித்து கோவை இராமநாதபுரம் பகுதியில் உள்ள வி.ஜி. எம். மருத்துவமனையில் டாக்டர், மோகன் பிரசாத் கூறியதாவது,

ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்விக் கழக தலைவராக தான் இருந்து வருகின்றேன் இதனை தொடர்ந்து உடுமலைப்பேட்டையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தை துவங்கி உள்ளதாகவும், இம்மையம் மூலமாக, தொழிற்கல்வி பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை மற்றும் நிலையான வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும்.

இந்த திறன் மையம் கிராமப்புற இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்" என்றார். இந்த நிகழ்ச்சியில், அண்ணா யுனிவர்சிட்டியின் ஓய்வு பெற்ற பேராசிரியர் ராவ், ரோட்டேரியன் சாய்ராம், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்விக் கழகத்தின் துணை செயலாளர் கோபாலன், பொள்ளாச்சி ஐ.டி. நிபுணர் ராமலிங்கம், வினோத், பாலா மற்றும் கௌதம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சிவகாசியில் இந்திய மருத்துவ சங்கத்துடன், தன்னார்வத் தொண்டு நிறுவனப் பெண்கள் அமைப்புகள் ஒருங்கிணைந்து சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர்.

## சாயல்குடியில்
# மத்திய எல்லை பாதுகாப்பு படை கொடி அணிவகுப்பு!



சாயல்குடி,மார்ச்.20–

சாயல்குடியில் மத்திய எல்லை பாதுகாப்பு படையினர் மற்றும் காவல் துறையினர் இணைந்து கொடி அணிவகுப்பு ஊர்வலம் நடத்தினர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு தேர்தல் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மத்திய எல்லை பாதுகாப்பு படையினர் மற்றும் காவல்துறையினர் இணைந்து அணிவகுப்பு ஊர்வலத்தை நடத்தினர்.

மேலும் துணை ராணுவ படையினர் ஆயுதம் ஏந்திய விழிப்புணர்வு கொடி அணிவகுப்பு ஊர்வலத்தை கீழக்கரை காவல் உதவி கண்காணிப்பாளர் குணால் உத்தம் ஷ்ருத்தே, மத்திய எல்லை பாதுகாப்பு படை டிஎஸ்பி கிருஷ்ணா, சாயல்குடி காவல் ஆய்வாளர் அன்னராஜ் ஆகியோர் தொடங்கி வைத்த ஊர்வலம் சாயல்குடி பேரூராட்சி அலுவலகத்தில் துவங்கி ராமேஸ்வரம் சாலை அருப்புக்கோட்டை சாலை வழியாக கிழக்கு கடற்கரை சாலையில் நிறைவடைந்தது.

## பழனி சண்முக நதி பாலத்தில்
# குடிநீர் குழாய் உடைந்து நீரூற்று போல் தண்ணீர் வெளியேறியது!



பழனி,மார்ச்.20–

பழனியில் சண்முக நதி பாலம் உள்ளது. இப்பாலம் பழனி டு உடுமலை சாலை செல்லும் வழியில் உள்ளது. இந்த பாலத்தின் ஓரத்தில் குடிநீர் குழாய்கள் போடப்பட்டுள்ளது. அக்ரஹாரம் கலைமுத்தூர் நெய்க்காரப்பட்டி ஆகிய ஊர்களுக்கு குடிநீர் இக்குழாய்கள் வழியாக தான் செல்கிறது.

இந்நிலையில் நேற்று குடிநீர் குழாய்கள் உடைந்து, தண்ணீர் நீரூற்று போல பத்தடி உயரத்திற்கு பீய்ச்சி அடித்தது. இதனால் வாகன ஓட்டுனர்கள் நனைந்தபடி சென்றனர். பின்பு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் விரைந்து வந்தனர். பின்பு ஊழியர்கள் உடைந்த குழாய்களை சீரமைத்தனர்.

## கோவையில் உள்ள
# காட்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் நெக்டர் ஆப் லைப் சாதனை விழா!
## கொடையாளர்களுக்கு பரிசு வழங்கல்!!




கோவை,மார்ச்.20

கோயம்புத்தூர்காட்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் "நெக்டர் ஆஃப் லைஃப்" மனித பால் வங்கி சாதனை விழா மற்றும் கொடையாளர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி மற்றும் பரிசு வழங்கும் விழா கோவை ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள ராஜஸ்தான் நிவாஸ் அரங்கில் நடைபெற்றது.

ரோட்டரி மாவட்டம் 3206ன் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆப் காட்டன் சிட்டி தனது சேவை திட்டமான "நெக்டர் ஆஃப் லைஃப்" மனித பால் வங்கித் திட்டத்தின் மூலம் 25 லட்சம் மி.லி. தாய்ப்பால் சேகரிப்பு என்ற மிகப்பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து, இதற்காகப் பாடுபட்ட கொடையாளர் தாய்கள் மற்றும் "நெக்டர் பீஸ்" தன்னார்வலர்களைக் கௌரவிக்கும் விழா கோயம்புத்தூர் ஆர். எஸ்.புரம், ராஜஸ்தான் நிவாஸில் நடைபெற்றது..

கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆப் காட்டன் சிட்டி தலைவர் தருண் குமார் ரான்கா மற்றும் செயலாளர் பாயல் சோர்டியா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினர்களாக, கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் மற்றும் உடற்பயிற்சி மற்றும் அதிகாரமளித்தல் பயிற்சியாளர் டாக்டர் ஜெயா மகேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினர்களாகவுமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் மிருதுபாஷினி கோவிந்தராஜன், எஸ். என். ஆர் அண்ட்.சன்ஸ் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர்ராமகிருஷ்ணன், ராஜஸ்தான் சங்கம் தலைவர் சந்தோஷ் குமார் முந்த்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் தாய்ப்பால் கொடை வழங்கிய தாய்மார்கள் மற்றும் நெக்டர் பீஸ் சேவையாளர்களுக்கு பாராட்டு தெரிவித்து நினைவு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

நெக்டர் ஆஃப் லைஃப்" திட்டத்தின் தலைவர் ராகேஷ் ரான்கா, இணைத் தலைவர் அர்ச்சனா குமார், மற்றும் சமூகச் சேவை இயக்குநர் ராபின் பாபெல் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்ட இயக்குநர் சம்பத் குமார், உதவி ஆளுநர் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஆளுநரின் குழுப் பிரதிநிதி அருள் உட்பட ரோட்டரி நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி ஒப்பந்த தூய்மை பணியாளர், பணியின் போது உயிரிழந்த மணிகண்டனுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கூறி அவரது உடலை வாங்க மறுத்த உறவினர்கள் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பாக மதுரை டு தேனி தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியில் 35வது ஆண்டு கல்லூரி தின விழா!

## திரைப்பட நடிகர் ஆரி அர்ஜூனன் பங்கேற்பு!!



கோவை,மார்ச்.20

கோவை ஆவாரம்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 35வது கல்லூரி தினவிழா கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் திரைப்பட நடிகரும் தன்னம்பிக்கைப் பேச்சாளருமான ஆரி அர்ஜுனன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் சிறப்புரையாற்றினார். அப்பொழுது அவர் கூறியதாவது,

தோல்விகள் நம்மை வெற்றியாளராக்கும், அவமானங்கள்தான் நம்மை சாதனையாளராக்கும். அதனால் உங்களுக்கு நேரும் அவமானங்களை வென்று காட்டுங்கள். கல்வியோடு மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன்மூலம் சம்பாதிக்கவும் முறையாக முதலீடு செய்து பொருளாதாரத்தை நிர்வகிக்கும் ஆற்றலையும் பெற வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினரும் கல்லூரியின் முன்னாள் மாணவியுமான அமெரிக்காவின் டிஸ்கௌண்ட் டைர் நிறுவனத்தின் குவாலிட்டி அஷ்யூரன்ஸ் பிரிவின் துணைமேலாளர் திவ்யா கனகராஜ் கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் கூறியதாவது:

பெண்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் கல்லூரிக்குப் பெரும் பங்கு இருப்பதாகவும், மற்றவர்களோடு ஆக்கப்பூர்வமான நட்புறவு பேணுதல், நம் வெற்றிக்குத் துணைநிற்கும் உந்து சக்திகளை மதித்தல், நம்முடைய பலவிதத் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் போன்ற பண்புகள் நம்மை மேம்படுத்த உதவும் என்றதோடு, வாய்ப்புகளைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ளவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

முன்னதாகக் கடந்த கல்வியாண்டில் கல்லூரி பெற்ற சிறப்புகளையும் மாணவிகளின் சாதனைகளையும் உள்ளடக்கிய ஆண்டறிக்கையைக் கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா வாசித்தார். எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் முதன்மை நிர்வாக அலுவலரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் செயலருமான சி.வி.ராம் குமார் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்குப் பரிசுகளும் பெஸ்ட் அவுட்கோயிங் விருதுகளும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தே.ஜ.கட்சியின் கூட்டணி வேட்பாளராக அர்ஜூன் சம்பத் போட்டியிட வேண்டும்!

## தென் மண்டல தலைவர் த.அன்பழகன் வலியுறுத்தல்!!



திருப்பரங்குன்றம்,மார்ச்.20

இந்து மக்கள் கட்சியின் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் பெரிய ரத வீதியில் கருப்பசாமி கோவில் திடலில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்திற்கு திருப்பரங்குன்றம் நகர் தலைவர் பிரபு தலைமை வகித்தார். நகர் பொதுச் செயலாளர் சிவசக்தி முன்னிலை வகித்தார். திருப்பரங்குன்றம் ஒன்றிய தலைவர் சாமி சரவணன் வரவேற்று பேசினார்.

மேற்கண்ட கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கட்சியின் தென் மண்டல தலைவர் த.அன்பழகன் கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி நிறைவேற்றி பரிந்துரை செய்தார்.

இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் திருப்பரங்குன்றத்தில் போட்டியிட தேசிய ஜனநாயக கூட்டணியில் வாய்ப்பு வழங்க வேண்டும் கடந்த 30 ஆண்டுகளாக திருப்பரங்குன்றம் கார்த்தி தீப போராட்டங்களை தொடர்ந்து நடத்தி பகுதி மக்களின் உரிமையை நிலைநாட்ட தமிழக முழுவதும் உள்ள முருக பக்தர்களின் கோரிக்கையை நிறைவேற்றவும் போராடி அதற்கான உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவை பெற்றிட உறுதுணையாக இருந்து வரும் இந்து மக்கள் கட்சிக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கி கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் அவர்களுக்கு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இந்து மக்கள் கட்சிக்கு உரிய பிரதிநிதி த்துவம் வழங்கப்பட்டு திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்படும் பட்சத்தில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் இந்து மக்கள் கட்சியின் சார்பில் தனித்துப் போட்டியிடுவது மேலும் கடந்த கால கார்த்திகை தீப வரலாறுகளை எடுத்துக் கூறி தீவிர பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபடுவது என்றும் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றிட பல்வேறு போராட்டங்கள் நடத்தி இறுதி வரை காவி கொடியினில் பயணித்து இன்னுயிர் ஈத்த இந்து முன்னணி அமைப்பாளர் வீரத்துறவி ராமகோபாலன் மதுரை வழக்கறிஞர் ராஜகோபாலன் செல்லூர் ஏ ஆர் காளிதாஸ், திருப்பரங்குன்றம்

ஜி. ஆர். ஞானசம்பந்தன், தற்போது இன்னுயிர் இத்த பூரண சந்திரன் ஆகியோருக்கு திருப்பரங்குன்றத்தில் நினைவு மண்டபம் ஒன்று அமைத்து அவர்களது மார்பளவு திருவருட்ச்களை நிறுவ அனைத்து இந்து அமைப்புகளும் ஒன்றுபட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை இந்து மக்கள் கட்சியின் தென் மண்டல தலைவர் த. அன்பழகன் நிறைவேற்றினார் மேற்படி கூட்டத்தில் தெற்கு மாவட்ட தலைவர் தேவி நகர் சுந்தர், மதுரை மாவட்ட அமைப்பாளர் தினகரன் ஆகிய உட்பட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்ட பொது செயலாளர் வேடர் புளியங்குளம் முருகானந்தம் நன்றி கூறினார்.

# யுனைடெட் கலை, அறிவியல் கல்லூரியில் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழா!

## மாணவர்கள், பேராசிரியர்கள் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது!!



கோவை,மார்ச்.20

கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழாவான சாதனையாளர்களை கொண்டாடும் யுகாஸ் 26 விழா நடைபெற்றது. இதில் கல்லூரி அளவில் பல துறைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பாகச் செயலாற்றிய பேராசிரியர்களுக்கும் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து சினிமா மற்றும் தொலைக்காட்சி புகழ் கலைஞர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள யுனைடெட் கல்வி நிறுவனங்களின் ஓர் அங்கமான யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழாவான சாதனையாளர்களை கொண்டாடும் யுகாஸ் 26 விழா கல்லூரியின் சரஸ்வதி அரங்கு மற்றும் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யுனைடெட் கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் பொறியாளர் எஸ் சண்முகம் தலைமையேற்று உரையாற்றினார். யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஆ.விஜயா கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையினை வாசித்தார். யுனைடெட் கல்விக் குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சி ஏ எம் கைலாஷ்குமார், செயலாளர் அருண்கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினராக புகழ்பெற்ற சின்னதிரை நட்சத்திரம் பிரனிகா தக்சு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிகளை தம் வாழ்க்கை அனுபவங்கள் வழி எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

கல்லூரி அளவிலே பல துறைகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், சிறப்பாகச் செயலாற்றிய பேராசிரியர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மாலை கலை நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக விஜய் தொலைகாட்சி மற்றும் சன் தொலைகாட்சிகளின் புகழ்மிக்க பாடகர்களான ஸ்ரீதர் சேனா, ரெஹானா, ஆதனா ஸ்ரீ, நகைச்சுவை பேச்சாளர்களான சுட்டி அரவிந்த், அசார், சின்னதிரை நட்சத்திரம் பிரனிகா தக்சு, டி.ஜே யோகராஜ் மற்றும் டி.ஜே வால்சன் வேல் போன்ற பிரபலங்கள் கலந்து கொண்ட கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வினை மனோஜ்குமார் தொகுத்து வழங்கினார்.

### மக்கள் உரிமைகள், சட்ட கழகம் சார்பில்

# வருகிற சட்டமன்ற தேர்தலில் 100% வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு!

## கோவை கீரணத்தத்தில் நடந்தது!!





கோவை,மார்ச்.20

அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பாக வருகின்ற சட்டமன்ற தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் என விழிப்புணர்வு நிகழ்ச்சி கோவை சரவணம்பட்டி அடுத்த கீரணத்தம் பகுதியில் நடைபெற்றது.

நீதியரசர் கற்பகவிநாயகம் அவர்களது, வழிகாட்டுதலின் பேரில், அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்க பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை சரவணம்பட்டி அடுத்த கீரணத்தம் பகுதியில் உள்ள ஸ்டிட்ஜ்வெல் நிறுவன வளாகத்தில், வாக்காளர் விழிப்புண ர்வு மற்றும் மகளீர் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் நிறுவன தலைவர் ஆர். கே. குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட துணைத் தலைவர் செந்தில் குமார் ஆகியோர் தேர்தல் குறித்து உரையாற்றினர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அமைப்பின் மகளீரணி வழக்கறிஞர் பிரிவின் மாவட்ட தலைவரும், வழக்கறிஞருமான தேன்மொழி என் வாக்கு, என் உரிமை எனும் தலைப்பில் விழா பேருரையாற்றினர். அப்பொழுது வாக்கு செலுத்துவதன் அவசியம் குறித்தும், வாக்காளர்களின் கடமை குறித்தும் எடுத்துக் கூறினார். தொடர்ந்து மகளீர் தினவிழாவை போற்றும் வகையில் பெண்கள் கடந்து வந்த பாதைகள் குறித்தும், இன்றைய நவீன உலகில் பெண்களின் பங்களிப்பு குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார். பெண்கள் அறியாமை எனும் இருட்டில் இருந்து மீண்டு வர இத்தனை ஆண்டுகள் கடந்தும், அறியாமை இருள் இன்னும்ம் கிராம புறங்களில் இருந்து வருகின்றது. இவற்றைகளைய நகரத்து பெண்கள் முன் வர வேண்டும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சண்முக சுந்தரம், அமைப்பின் மாவட்ட செயலாளர் விஜயராவ், துணை தலைவர் எல்.ஐ.சிராஜேஷ், அமைப்பின் மகளீரணி மாவட்ட தலைவர் எல்ஐசி. சாந்தி, மற்றும் சிகாமணி, கலை கண்ணன், துணை ஆசிரியர் செந்தில் குமார், ஆசிரயர் சண்முக சுந்தரம், சரவணன், கந்தவேல், ஸ்ரேயா, சூர்யா மற்றும் ஸ்டி ட்ச் வெல் நிறுவன மகளீர்கள், பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கோடை வெயில் கொளுத்தும் வேளையில் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு சாலையில் ரோஜா நிறத்தில் பூத்துக் குலுங்கும் காகித பூக்களை படத்தில் காணலாம்.

### கோடை வெயிலை முன்னிட்டு

# கோவை த.மு.ம.க. சார்பில் இலவச நீர் மோர் வழங்கல்!




கோவை,மார்ச்.20

கோடை கால வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் கோவையில் அதிகரித்து வருகின்ற நிலையில், கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இலவச நீர் போர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்கி இலவச நீர் மோரை பொதுமக்களுக்கு வழங்கினார். சுமார் ஆயிரகணக்கான பொதுமக்கள் நீர் மொரை பருகி சென்றனர். மேலும் இது குறித்து வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது..

கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பொது மக்கள் வெயிலை சமாளிக்க முடியாமல் தவித்து வருகின்றனர். இதனை அறிந்து தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இலவச நீர் மோர் வழங்கும் விழா வை ஏற்பாடு செய்து, கோவை சிவாஜி காலனி பகுதியில் ஞாயிறுக்கிழமை காலை 11 மணி முதல் மதயம் 1மணி வரை நீர் மோர் வழங்கினோம் இதில் சுமார் ஆயிரக்கணக்கானோர் நீர் மோர் வாங்கி அருந்தி சென்றதாக கூறினார்.

இந்தநிகழ்ச்சியில்வழக்கறிஞர்குமாஸ்தாக்கள்பெரிய குமாஸ்தா செல்வராஜ், ஜெபா, லட்சுமி, வைத்தியர் பாலகிருஷ்ணன், அமல்ராஜ், மோகன், வெங்கட், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில செயலாளர் சுந்தர், பைனான்ஸியர் பெருமாள், சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்க தலைவர் லயன் டாக்டர் நடராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில்

# எஸ்.ஆர்.இ.சி. இன்னோவேட் 2026 இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான், ப்ரோஜக்ட் எக்ஸ்போ நிகழ்ச்சி!

## வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்க பரிசு!!




கோவை,மார்ச்.20

கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் எஸ்.ஆர்.இ.சி இன்னோவேட் 2026 – இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான், ப்ரோஜக்ட் எக்ஸ்போ நடைபெற்றது. இதில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் எஸ்.ஆர்.இ.சி இன்னோவேட் 2026 என்ற இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான், ப்ரோஜக்ட் எக்ஸ்போ நடைபெற்றது. இதில் "தொழில்துறைகல்வித்துறை கூட்டாண்மை மூலம் திறன் இடைவெளியைக் குறைத்தல்"என்ற தலைப்பிலான பேனல் டிஸ்கசனும் நடைபெற்றது.

இதற்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர்.சௌந்தரராஜன் தலைமை தாங்கி தொழில்துறை கல்வித் துறை ஒத்துழைப்பின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

நடைபெறும் போட்டிகளை மதிப்பீடு செய்ய ஜெப்டோ லாஜிக் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணை நிறுவனர் சுரேஷ் குப்புசாமி, ஹிரோடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் கீத் நாராயணன், இண்டோ ஷெல் காஸ்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணைத் துணைத் தலைவர் டாக்டர்.சரவணன், சிர்கோர் நிறுவனத்தின் செயல்பாட்டுச் செயல்முறைச் சிறப்பு இயக்குநர் ராம்ஜி சேதுராமலிங்கம், ஈஎல்ஜி எக்யூப்மென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்புச் சிறப்பு மற்றும் புத்தாக்க மூத்த இயக்குநர் காளிமுத்து மற்றும் ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூத்த தகவல் தொழில்நுட்ப மேலாளர் அரியநாயகம் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் கலந்துக்கொண்டு தொடக்கவுரையை நிகழ்த்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில் 630 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 100 அணிகள் இண்டஸ்ட்ரி ஹேக்கத்தானிலும், 86 அணிகள் ப்ராஜெக்ட் எக்ஸ்போவிலும் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்தனர்.

இதற்காக கலந்துக் கொண்ட தொழில் வல்லுநர்கள், பங்கேற்ற அணிகளுக்கு நடுவர் குழு உறுப்பினர்களாகவும் வழிகாட்டிகளாகவும் பணியாற்றி, மாணவர்களின் முடிவுகளை மதிப்பீடு செய்தனர்.

மேலும் இதன்மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, படிக்கும் காலத்திலேயே மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பப் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், சக மாணவர்களுடன் இணைந்து பணியாற்றவும், தொழில்துறை வல்லுநர்களிடமிருந்து நுண்ணறிவுகளைப் பெறவும் வாய்ப்பு பெற்றனர்.

அதன் பின்னர் இண்டஸ்ட்ரி ஹேக்கத்தானில் வெற்றி பெற்றவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல், உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் தொடக்க நிதி வழங்கப்பட்டது. அதே போல, ப்ராஜெக்ட் எக்ஸ்போவில் முதல் இடம் பிடித்த அணிகளுக்கு ரூ.10 ஆயிரமும், இரண்டாம் இடம் பிடித்த அணிகளுக்கு ரூ.5 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட்டது. சிறந்த வடிவமைப்பு, சிறந்த சமூகத் தாக்கம், சிறந்த புத்தாக்கம், மேலும் அனைத்திலும் சிறந்த அணி மற்றும் சிறந்த ஸ்டார்ட்அப் யோசனை ஆகியவற்றுக்கும் சிறப்பு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் தொழில்துறை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066